

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.5.2023 அன்று ஜப்பான் நாட்டின் ஒசாகாவில் அமைந்துள்ள கோமாட்சு நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## போர்க்கப்பலில் இருந்து ஏவுகணை சோதனை வெற்றி!

புதுடெல்லி, மே 29 -

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் மர்மகோவா போர்க் கப்பல் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய கடற்படையுடன் இணைக்கப்பட்டது.

இந்தப் போர்க் கப்பலில் அதிநவீன ரேடார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இலக்குகளை துல்லியமாக தாக்கும் திறன்கொண்ட ஏவுகணைகள் இதில் உள்ளன.

163 மீட்டர் நீளமும் 17 மீட்டர் அகலமும் கொண்ட இந்தப் போர்க் கப்பலின் எடை 7 ஆயிரத்து 400 டன் ஆகும். மணிக்கு 55 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும்.

இந்தப் போர்க் கப்பலில் இருந்த ஏவுகணை மூலம் சூப்பர்சோனிக் இலக்கை இடைமறித்து அழிக்கும் சோதனையை இந்திய கடற்படை மேற்கொண்டது. அந்தச் சோதனை வெற்றிகரமாக நிறைவடைந்ததாக கடற்படை தெரிவித்தது.

# உலகப் புகழ்பெற்ற ஜப்பான் நாட்டின் பழம்பெரும் கோட்டையான 'ஒசாகா கோட்டை'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்!

**ஒசாகா (ஜப்பான்) மே 29-**

**உலகப் புகழ்பெற்ற ஜப்பான் நாட்டின் பழம்பெரும் கோட்டையான ஒசாகா கோட்டையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.**

அதன் விவரம் வருமாறு:-

ஒசாகாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு பிறகு, ஜப்பான் நாட்டின் பல்வேறு நிறுவனங்களின் முதன்மை அலுவலர்களுடனான மதிய உணவுடன் கூடிய சந்திப்பு நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஒசாகா மாகாணத்தின் துணை ஆளுநர் நோபுஹிகோ யமாகுஜி அவர்கள் (Osaka Province Vice Governor Mr. Nobuhiko Yamaguchi) ஜப்பான் நாட்டின் பழம்பெரும் கோட்டையான ஒசாகா கோட்டையின் சிறப்பைப் பற்றி எடுத்துக்கூறி அதனை பார்வையிடுமாறு அழைப்பு விடுத்தார். அவரது அழைப்பினையேற்று, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.5.2023) ஜப்பான் நாட்டின், ஒசாகாவில் உள்ள 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட உலகப் புகழ்பெற்ற ஜப்பான் நாட்டின் பழம்பெரும் கோட்டையான ஒசாகா கோட்டையைப் பார்வை யிட்டார்.

ஒசாகா கோட்டை அசுச்சிமோமோயாமா காலத்தின் 16-ஆம் நூற்றாண்டில் ஜப்பானை ஒன்றிணைப்பதில் முக்கிய பங்கு வகித்தது. இக்கோட்டை சுமார் 61,000 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டது. ஜப்பானிய அரசால் இக்கோட்டை முக்கியமான கலாச்சார சொத்தாக போற்றி பாதுகாக்கப்பட்டு வருகிறது. இக்கோட்டையானது அகழிகள், கிணறுகள், தோட்டங்கள் போன்ற இயற்கைச் சூழலுடன் அமைந்துள்ளது.

செம்மொழியாம் தமிழ்மொழியின் பெருமையையும், தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, பண்டையத் தமிழர்களின் செழுமையான பண்பாட்டுச் சான்றுகளை உலகம் அறிந்து கொள்ளும் வகையில், அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அத்துடன், கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கீழடி நாகரிகம் பற்றிய அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகக் மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் உலகத் தரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி அருங்காட்சியகத்தை நிறுவியது, தமிழ்நாட்டின் பண்டைய பொருநை ஆற்றங்கரையின் நாகரிகப் பெருமையை வெளிப்படுத்தும் முகமாக, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய தொல்பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தப்படுத்த உலகத் தரத்துடன் பொருநை அருங்காட்சியகத்தை அமைத்திட அடிக்கல் நாட்டியது போன்ற பண்டைய கலாச்சார பெருமைகளை மீட்டெடுத்து பாதுகாக்கும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம், பண்டைய கலாச்சாரச் சின்னங்களை போற்றி பாதுகாத்திடும் நடவடிக்கைகளில் ஜப்பான் அரசும், தமிழ்நாடு அரசும் ஒன்றுபோல் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஒசாகா கோட்டை அருங்காட்சிய இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (27.5.2023) ஜப்பான் நாட்டின், ஒசாகாவில் உள்ள 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட உலகப் புகழ்பெற்ற ஜப்பான் நாட்டின் பழம்பெரும் கோட்டையான ஒசாகா கோட்டைக்குச் சென்று பார்வையிட்டார்.

### ஒன்றிய அமைச்சர்

## நிதின் கட்கரி பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, மே 29-

ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி அவர்களின் பிறந்தநாளையொட்டி அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**திரு. நிதின் கட்கரி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**அவர் எப்போதும் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும் ஒசாகாவில் தனது இரண்டு நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு டோக்கியோ மாநகரத்திற்கு நேற்று (28.5.2023) புல்லட் இரயில் மூலமாக வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, டோக்கியோ இரயில் நிலையத்தில் ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சி.பி. ஜார்ஜ் அவர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஆலங்குடி (கல்லாலங்குடி) ஆர்.ரெத்தினவேல்பிரகதா இல்லத் திருமணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று மணமக்கள் டாக்டர் ஆர்.வெங்கடேஷ் – டாக்டர் ஆர்.மோனிஷா ஆகியோரை வாழ்த்தினார். புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, கழக மாநில நிர்வாகிகள் த.சந்திரசேகர், அசோக்பாண்டியன், பரணி கார்த்திகேயன், ஆர்.அண்ணாமலை, தென்னலூர் எம்.பழனியப்பன், ஒன்றியச் செயலாளர்கள் கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேலு, கே.எஸ்.ரவி,தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம், கே.சி.சிவகுமார், கே.வி.எஸ்.ஏ.மோகன், எம்ஜி (ஏ) ராமச்சந்திரன், ஏ.பழனிக்குமார், ராஜ சரவணன், ஏ.கே.செல்வம், ஆர்.எஸ்.ராஜபெரியண்ணன், இளைஞர் அணி ஆர்.விக்னேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

